1994 மார்ச் 30]

151—

வண்ணக்கற்கள் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி விவரம்,

*19106—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் என்னென்ன வகை கருப்பு மற்றும் பல வண்ணக் கற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

(ஆ) இதனால் அரசுக்குக் கிடைக்கும் அன்னியச் செலாவணி எவ்வளவு ?

(இ) இதனை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு கனிம நிறுவனம் குன்னம், பைத்தூர் பேவனூர், புலிக்குன்றம், எல்லிக்கரடு மற்றும் திருக்கரை, சிறுவாலை, கண்ணாம்மூச்சி இன்னும் பல குவாரிகளிலிருந்து கிடைக்கும் தரமுள்ள கரும்பாறைகளை ஜப்பான் மற்றும் கொரியா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

கிருஷ்ணகிரி வட்டத்தில் கிடைக்கும் சாம்பல் நிறப்பாறைகள் ''பாரடைஸோ'' என்று சொல்லப் படுகிற அந்தக் கற்களை ஜெர்மனி மற்றும் இத்தாலி நாடு களுக்கு ஏற்றுமதி செய்கிறது.

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் கீழையூர் மற்றும் கீழவளவு குவாரிகளில் கிடைக்கும் வெள்ளை நிறப்பாறைகளை ''காஷ்மீர் ஒயிட்'' என்று பெயரிட்டு, இத்தாலி, ஜெர்மனி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

மேலும், தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தொழிற்சாலை யிலிருந்து மெருகிடப்பட்ட கரும்பலகைகளை ஜப்பான், மற்றும் ஜெர்மனி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, மலேசியா, ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சருக்கு இடையூறு ஏற்படாத வகையில் மற்றவர்கள் அருகில் அமர்ந் திருக்கவேண்டும்.

[1994 மார்ச் 30

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: அதை அமைச்சர்களே தான் செய்கிறார்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்களுக்கு அமைச்சர்களே இடையூறு செய்யக்கூடாது.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(ஆ) தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்யப்பட்ட கிரானைட் கற்கள் மற்றும் மெருகூட்டப்பட்ட கிரானைட் பொருட்கள் மூலம் 1990-91-ஆம் ஆண்டு ரூ. 1780.56 இலட்சங்களும், 1991-92-ஆம் ஆண்டில் ரூ. 2506.03 இலட்சங்களும் மற்றும் 1992-93-ஆம் ஆண்டில் ரூ. 3449.65 இலட்சங்களும் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை ஈட்டியுள்ளது.

(இ) தமிழ்நாடு கனிம நிறுவனம் கிரானைட் மற்றும் மெருகூட்டப்பட்ட பொருட்கள் வகையாக ஏற்றுமதி செய்ததன் மூலம் 1993-94 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 42 கோடியும் மற்றும் 1994-95 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 50 கோடியும் அன்னியச் செலாவணி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் என்னென்ன வகை கறுப்பு மற்றும் பல வண்ணக் கற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்ற கேள்விகள் கேட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பச்சைமலையில் கருப்புக் கற்கள் இருக்கின்றன. அதனை அமைச்சர் அவர்கள் அறிவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலையில் பச்சைக் கல் இருப்பது பற்றிக் கூறிய உறுப்பினர் திரு. ரவிச்சந்திரன் அவர்கள், என்னைக்கூப்பிட்டுச் சென்றுக் காண்பித்தால், நான் அறிவேன்.

1994 மார்ச் 30]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஓர் அமைச்சராக இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருநாள் ஒதுக்கித் தந்தால், பச்சைமலைப் பகுதிக்கு, அவர்களை அழைத்துச் சென்று, அந்த மலைப் பகுதியில் எங்கெங்கு கற்கள் இருக்கின்றன என்பது காண்பிக்கப்படும். ஆனால், அந்தமலையிலுள்ள புதருக்குள் அவை இருப்பதால், அவர்கள் அங்கெல்லாம் சென்று நடக்க முடியுமா என்பதை நான் அறிய விரும்கிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ரவிச்சந்திரன் அவர்களுக்கு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோர்மீது என்ன கோபமோ தெரியவில்லை. என்னைப் பாராட்டி இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை தமிழ்நாடு ஜியாலாஜிகல் சர்வே துறையின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, உரிய கற்கள் இருக்குமானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு வண்ணக் கற்களை மெருகூட்டுகின்ற தொழிற்சாலையை, தர்மபுரி மாவட்டத்திலே நிறுவியுள்ளார்கள். அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகிற கற்களை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு, உள்நாட்டிலும் அவை விற்பனைக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, உள்நாட்டில் ஆண்டொன்றுக்கு எவ்வளவு விற்பனை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய கற்கள் எல்லாம் வெளிநாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. உள்நாட்டில் விற்பனை செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. அர்ச்சுனன்.

[1994 மார்ச் 30

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கனிமக் கற்கள்-கருப்பு மற்றும் பல வண்ணக் கற்கள்-நிறைய இருக்கின்றன. குறிப்பாக அரசு புறம்போக்கு நிலத்திலே நிறைய கிடைக்கின்றன. இவை அனைத்தையும் தற்போது டாமின்'' உற்பத்தி செய்து கொண்டிருக்கிறதா? அல்லது, உற்பத்தி செய்ய முடியாத பகுதியில் தனியாரோ, அல்லது 'டாமின்னும்' தனியாரும் சேர்ந்து கூட்டுறவு நிறுவனத்தின் மூலமோ உற்பத்தி செய்வதற்கு அரசு முன்வருமா எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் தனியார் நிலங்களில் இருக்கிற கிரானைட கற்களுக்குத்தான் அரசு அனுமதி வழங்கிக் கொண்டிருக்கிறது. அரசு நிலங்களில் இருக்கிற கிரானைட் கற்களை வெட்டி எடுக்கிற உரிமை 'டாமின்'னுக்கு மட்டும் இருக்கிறது. காரணம், அதுஒரு அரசு நிறுவனமாக இருக்கிற காரணத்தினால், தனியாரோ, அல்லது டாமினும் தனியாரும் சேர்ந்தோ அந்தக் கற்களை வெட்டி எடுக்கிற உரிமை, கொள்கை முடிவாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்துபேசி, எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே 'டாமின்' ஆல் வெட்டி எடுக்கப்படும் கற்கள் அனைத்தும் மெருகூட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனவா? இல்லையென்றால், மெருகூட்டப்படாமல் வெறும் கற்களாக அனுப்பப்படுகின்றனவா? மெருகூட்டும் தொழிற்சாலைகள், டாமினுக்குச் சொந்தமாக எத்தனை உள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெட்டியெடுக்கப்படும் கற்களை அப்படியே விற்க முடியாது. மெருகூட்டப்பட்டுத்தான் கற்களை விற்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான மெருகூட்டும் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருப்புக் கற்கள் எல்லாம் ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன என்று சொன்னார்கள். சமீபத்திலே ஜப்பான் தென்னுடைய வர்த்தகத்தை சீனாவிடம் வைத்துக் கொள்வதாக தெரிவித்திருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதன் மூலமாக நம்முடைய கருப்புக் கற்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறதா? அதன் மூலமாக நம்முடைய அந்நியச் செலவாணி குறைய வாய்ப்பு இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பாராளுமன்றத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்வி. இருந்தாலும் ஒன்றை நான் தெளிவாக்க விரும்புகிறேன். இப்போது மத்திய அரசாங்கம் கனிம வர்த்தகத்தைப் பொறுத்த அளவில், ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறது. வெளிநாட்டிலே இருந்து யார் வேண்டுமானாலும் வந்து கனிமக் கற்களை வெட்டி யெடுத்து தொழிற்சாலை அமைத்து, பிராஸஸ் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தரலாம் என்று இப்போது மத்திய அரசு முடிவு ஒன்றினை அறிவித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கிரானைட் மட்டுமல்லாமல் சோப் ஸ்டோன்; ஃப்பெல்ஸ்பார் இப்படி பல கனிமங்கள் கிடைக்கின்றன. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலமாக இந்தக் கனிமங்களை எல்லாம் வெட்டி எடுத்து, வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கனிம நிறுவனத்தைப் பொறுத்தவரையில் கிரானைட் கற்களை மட்டும் தான் வெட்டியெடுத்து, மெருகூட்டி, வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். மற்ற கனிமங்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும் என்று சொன்னால், அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால், அதற்கு விரிவான பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி புலிக்குன்றத்தில் கருப்புக் கற்கள் எக்கச்சக்கமாக, தேவைக்கு மேல் இருக்கின்றன. ஆனால் அந்தக் கற்களை எடுப்பதற்கு கிரேன் வசதிகளும், சில எந்திர வசதிகளும் இல்லாத காரணத்தால் மார்க்கெட்டில் நல்ல வரவேற்பிருக்கிற அந்த கற்களை எடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாத சூழ்நிலைமை இருப்பதை அரசு அறியுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது, தனியார் நிலமா, அரசு நிலமா அல்லது டாமின் குவாரியா, தனியார் குவாரியா என்பதைத் தெளிவாகத் தெரிவிக்காத காரணத்தினால் இதற்குத் தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. தவசி.

திரு. கே. தவசி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் கீழையூரில் அதிக விலையுயர்ந்த கிரானைட் கற்கள் கிடைக்கின்றன. அவற்றை அங்கேயே பாலிஷ் செய்யக் கூடிய தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசின் கொள்கைப் பிரகாரம் தனியார் நிலங்களுக்கு, தனியாருக்கு அனுமதி கொடுக்கிறோம். யார் வேண்டுமானாலும் அத்தகைய தொழிற்சாலயை அமைத்து, கற்களை மெருகூட்டி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறோம். ஆகவே, சட்டமன்ற உறுப்பினரே அதற்கு முயற்சி எடுத்து அத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு முன் வருவார்களேயானால் அரசு அதற்குக் கைகொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். முருகையா பாண்டியன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது வெள்ளைக் கற்கள், கருப்புக் கற்கள் இவற்றையெல்லாம் எங்கள் பகுதியிலே வெட்டியெடுத்துக்

கொண்டிருக்கிறார்கள். அவற்றை வெளிநாடுகளுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி கருப்புகற்கள் வெட்டியெடுக்கப்படும் பொழுது உண்மையான வைரக் கற்களும் வந்து கொண்டிருக்கின்றன. சாதாரண புஞ்சை நிலத்திலும், வனத்துறைக்குச் சொந்தமான நிலத்திலும்கூட, வைரக் கற்கள் இருக்கின்றன. நானே அந்தமாதிரி வைரக் கற்கள் எடுத்து வந்ததைப் பார்த்திருக்கிறேன். உண்மையான இந்த வைரக் கற்களைக் கொண்டு, வைரத் தொழிற்சாலை அமைத்து, வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் அளவில், அரசாங்கமே அப்படி வைரக்கல் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு முற்றிலும் தொடர்பில்லாத கேள்வி. இதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு கிரானைட் கற்கள் ஏற்றுமதி செய்யப்படுவதுபோல, வேறு மாநிலங்களிலிருந்தும் ஏற்றுமதி செய்கிறார்களா? அதேபோல கோவை மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையிலே இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களிலேயிருந்து குவாரியிலிருந்து கல்லை எடுத்துக் கொண்டு சிமெண்ட் பேக்டரிகளுக்கும் மற்றும் உள்ள இடங்களுக்கெல்லாம் செல்கிறார்கள். அதிலே, கிரானைட் சாம்பல் நிறக்கற்கள் கிடைக்குமா என்று அரசு அதை பரிசீலினை செய்யுமா? அதேபோல், நாங்கள் கூட வெளிநாடு சென்றிருந்தபோது, இங்கேயிருந்து கிரானைட் ஏற்றுமதி செய்த ஒரு மாபெரும் தொழில் அதிபர், எங்களை நல்லபடியாக ஜப்பானிலே உபசரித்தார். அங்கே கூட, நமது மாநிலத்திலுள்ள கிரானைட் கற்களுக்கு புகழ் இருக்கிறது. அதேபோல், வேறு மாநிலங்களிலிருந்து, இங்கேயிருந்து கிரானைட் கற்கள் அனுப்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தினைப் போல், கர்நாடகா, ஆந்திரம் ஆகிய மாநிலங்களிலிருந்து அதுபோன்ற கிரானைட் கற்கள் வெட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு மூலமாக குவாரி என்ற முறையிலே ஏலம் எடுத்து அரைக் கல், ஜல்லி உடைக்கிறேன் என்று மலிவாக ஏலம் எடுத்து, அதிலே நல்ல கிரானைட் உற்பத்தி பண்ணி தனியாக அவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடை செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குவாரி லைசன்ஸ் வேண்டும் என்று சொன்னால், முதலிலே நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல், கருங்கல் குவாரி என்று முதலிலே சில பேர் அனுமதி வாங்கி விடுகிறார்கள், அப்படி அனுமதி கொடுக்கப்பட்ட பிறகு அதிலே கிரானைட் கற்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டால் அரசு அதைத் தடை செய்து கொண்டிருக்கிறபோது, அவர்கள் உயர்நீதிமன்றம் சென்று தடை வாங்கி, இப்படி சட்டவிரோதமாக கற்களை எடுத்து வருவது சில இடங்களிலே இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்கு அரசு இப்போழுது புதிய முறையை கையாண்டு கற் குவாரிகளின் அனுமதி கேட்கின்றபோது, கிரானைட் அதிலே இருக்கிறதா என்பதை கண்டறிவதற்கு தமிழ்நாடு கனிம நிறுவனம் அதாவது TAMIN என்று சொல்லப்படுகிற அந்த நிறுவனத்தினுடைய 'நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிக்கேட்', தடையில்லா சர்ட்டிபிக்கேட், வழங்கப்பட்ட பிறகு தான், அப்படிப்பட்ட அனுமதிகள் இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது உயர்நீதிமன்றத்தினுடைய ஆணையின் மூலம் சட்ட விரோதமாக அப்படிப்பட்ட கற்களை எடுத்தவர்கள் மீது அரசு, அந்த வழக்கை விரைவாக முடித்து மீண்டும் அந்தக் குவாரியை அரசே எடுப்பதற்கு உரிய தீவிர நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 152, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

152—

கீரிப்பாறை ரப்பர் தொழிற்சாலையை மேட்டுப் பகுதிக்கு மாற்றுதல்.

*17474—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—